## தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்
## &
## இந்தியவானிலைத்துறை
## வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம், கோவை
## ஈரோடுமாவட்டவானிலைசார்ந்தவேளாண் அறிக்கை
## (10.05.2023முதல் 14.05.2023)

**அறிக்கை எண் 037/2023** **தேதி.09.05.2023**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 31°செ முதல் 37°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 20°செ முதல் 27°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 18°செ முதல் 21°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 10°செ முதல் 13°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே பரவலாக மழை பெறப்பட்டது.

**ஈரோடு மாவட்டத்தின் கடந்தவாரவானிலை**

ஈரோடு மாவட்டத்தின் 04.05.23முதல் 08.05.23 வரையிலும் பகல்நேரவெப்பநிலை 31°செ முதல் 34°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 23°செ முதல் 24°செ ஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் 91 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 57 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 8-15 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை பதிவானது.

**ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்தவாரவானிலை (04.05.2023 முதல் 08.05.2023) | | | | | | அடுத்தஐந்துநாட்களுக்கானவானிலை முன்னறிவிப்பு 14.05.2023- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 04/05 | 05/05 | 06/05 | 07/05 | 08/05 | தேதி | நாள்-1 10/05 | நாள்-2 11/05 | நாள்-3 12/05 | நாள்-4 13/05 | நாள்-5 14/05 |
| 0.1 | 22.2 | 4.2 | 15.6 | 0.9 | மழை (மி.மீ) | 10 | 0 | 10 | 0 | 0 |
| 32 | 34 | 33 | 34 | 31 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 34 | 33 | 33 | 34 | 35 |
| 24 | 24 | 24 | 23 | 24 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 24 | 24 | 24 | 23 | 24 |
| 6 | 6 | 7 | 6 | 6 | மேக மூட்டம் (ஆக்டர்) | 7 | 7 | 8 | 8 | 8 |
| 83 | 84 | 80 | 91 | 87 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 70 | 70 | 70 | 70 |
| 61 | 58 | 57 | 63 | 66 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 40 | 30 | 30 | 40 | 30 |
| 10 | 13 | 12 | 8 | 15 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 4 | 4 | 6 | 4 | 6 |
| 360 | 230 | 50 | 200 | 320 | காற்றுவீசும் திசை | 290 | 250 | 250 | 250 | 290 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை ஈரோடு (10.05.2023 முதல் 14.05.2023)**

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 33°செ முதல் 35°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23°செ முதல் 24°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 70 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 30 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 4-6 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென்கிழக்கு திசைவரை

| ஈரோடு மாவட்டத்தில் உள்ள தொகுதி வாரியாக உள்ள அடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | அம்மாபேட் | அந்தியூர் | பவானி | பவானிசாகர் | சென்னிமலை | ஈரோடு | கோபி | கொடுமுடி | மொடக்குறிச்சி | நம்பியூர் | பெருந்துறை | சத்தியமங்கலம் | தாளவாடி | டி.என்.பாளையம் |
| 10-05-2023 | 7.0 | 8.0 | 7.0 | 14.0 | 7.0 | 7.0 | 9.0 | 5.0 | 7.0 | 9.0 | 7.0 | 13.0 | 31.0 | 12. |
| 11-05-2023 | 0.0 | 0.0 | 0.0 | 2.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 1.0 | 2.0 | 0. |
| 12-05-2023 | 7.0 | 9.0 | 7.0 | 15.0 | 6.0 | 7.0 | 9.0 | 5.0 | 7.0 | 8.0 | 7.0 | 14.0 | 39.0 | 12. |
| 13-05-2023 | 0.0 | 0.0 | 0.0 | 1.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0. |
| 14-05-2023 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0. |

## வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| பொது அறிவுரை | | அடுத்த 5 நாட்களுக்கு லேசான மழையுடன் காற்றின் வேகம் 6 -10 கி.மீ வரை எதிர்பார்க்கப்படுகிறது.<br>எதிர்பார்க்கப்படும் மழையினை சரிவுக்கு குறுக்காக கோடை உழவுசெய்து களைகளை கட்டுப்படுத்துவதுடன் மண்அரிப்பினையும் தடுக்கலாம்.<br>மழை எதிர்பார்க்கப்படுவதால் அறுவடை செய்த தானியங்கள் மற்றும் பயறுகளை பாதுகாப்பாக சேமிக்கவும். |
| நெல் | நாற்றாங்கால் | மழை எதிர்பார்க்கப்படுவதால் குறுகிய கால நெல் சாகுபடிக்கு நாற்றாங்கால் தயார் செய்யவும். |
| சோளம் | விதைப்பு | கடந்த வார மற்றும் எதிர்பார்க்கப்படும் மழையினைப் பயன்படுத்தி சோள விதைப்பினை தகுந்த வடிகால் வசதியுடன் தொடரவும். |
| கம்பு | விதைப்பு | கடந்த வார மற்றும் எதிர்பார்க்கப்படும் மழையினைப் பயன்படுத்தி கம்பு விதைப்பினை தகுந்த வடிகால் வசதியுடன் தொடரவும். |
| நிலக்கடலை | விதைப்பு | சித்திரைப்பட்ட நிலக்கடலை நடவு செய்ய இதுவே உகந்த தருணமாகும். தொடர்ந்து மழை பெய்ய வாய்ப்புள்ளதால் நிலம் தயார் செய்து விதைப்பு செய்யவும் |
| எள் | வளர் மற்றும் பூக்கும் | தொடர் மழையினால் எள்பயிர் சாய்வதை தடுக்க போதிய வடிகால் வசதி மேற்கொள்ளவும். |
| கரும்பு | | மழையுடன் வேகமான சூறைக்காற்றும் எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதங்களுக்கு மேலான கரும்பில் தோகை உரித்து விட்டம் கட்டவும்.<br>தொடர்ந்து மழை பெய்ய வாய்ப்புள்ளதால் பின் பருவ கரும்பு நடவில் வடிகால் வசதி செய்து கரணை அழுகலை தவிர்க்கவும். |
| வாழை | 5 மாதத்திற்கு மேல் | மழையுடன் வேகமான சூறைக்காற்றும் எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதங்களுக்கு மேலான வாழை மரங்களுக்க தகுந்த முட்டு கொடுக்கவும். |

| | | |
|---|---|---|
| தென்னை | | தென்னை மரத்தைச் சுற்றி உள்சாய்வு வட்டவடிவ பாத்திகளை அமைப்பது கோடையில் மழை நீரை தக்க முறையில் வேரில் சேமிக்க உதவும். |
| மஞ்சள் | விதைப்பு | எதிர்பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி அடுத்துவரும் மஞ்சள் நடவுக்கு நிலம் தயாரிக்க உகந்த காலமாகும். பெய்துள்ள மழையை பயன்படுத்தி மஞ்சள் நடவு செய்யவும்.<br>கிழங்கு உருவாகும் பருவத்திலுள்ள மஞ்சளில் போதிய வடிகால் வசதி மேற்கொள்ளவும். |
| கால்நடைகள் | | மழையுடன் இடி மின்னலும் எதிர்பார்க்கப்படுவதால் கால்நடைகளை பாதுகாக்க கொட்டைகளுக்குள் கட்டவும்.<br>கால்நடை குடில்களுக்கு உட்புறமும் அதை சுற்றி தண்ணீர் தேங்காமல் பாதுகாப்பதன் மூலம் கொசு உற்பத்தியை குறைக்கலாம். |

## குறுஞ்செய்தி

- தென்னை மரத்தைச் சுற்றி உள்சாய்வு வட்டவடிவ பாத்திகளை அமைப்பது கோடையில் மழை நீரை தக்க முறையில் வேரில் சேமிக்க உதவும்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**